அங்குனுகொலபெலஸ்ஸ பிரதேச சபை - 2024
---

1. நிதிக் கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

அங்குனுகொலபெலஸ்ஸ பிரதேச சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயற்பாட்டுக் கூற்று, தேறிய சொத்துக்கள் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகார சட்டத்தின் உப பிரிவு 172(1) மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10(1) உபபிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையில் உள்ளடக்கிய ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, அங்குனுகொலபெலஸ்ஸ பிரதேச சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு கோட்பாடுகளுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.
இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- பிரதேச சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கு அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் பிரதேச சபை இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விஷேட ஏற்பாடுகள் அடங்கியுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குகின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களில் அடங்கியுள்ளன.

1.6 நிதிக் கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

1.6.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் அட்டுறு அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்றதென கணக்கீட்டு கொள்கைகள் இலக்கம் 02 இன் கீழ் காட்டப்பட்ட போதிலும், நீதிமன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டண வருமானம் பண அடிப்படையில் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.	எதிர் காலத்தில் சரியாக கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என.	நீதிமன்ற தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம் அட்டுறு அடிப்படையில் கணக்கீடு செய்யப்பட வேண்டும்.

1.6.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

	கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	கொள்வனவு செய்திருந்த மற்றும் நிர்மாணிக்கப்பட்டிருந்த கூட்டுப் பெறுமதி ரூபா 90,802 தொகைக்கான சொத்துக்களை மூலதனப்படுத்தியிருக்கவில்லை.	2025 ஆண்டில் சரி செய்யப்படும் என.	கொள்வனவு செய்யப்பட்டிருந்த மற்றும் நிர்மாணிக்கப்பட்டிருந்த நடைமுறை அல்லாத சொத்துக்கள் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும்.
(ஆ)	நூலகத்தின் சேர்வு பதிவேட்டின் படி நூலகப் புத்தகங்களின் கிரயம் ரூபா 3,052,194 தொகை எனினும், நிதிக்கூற்றுக்களில் ரூபா 2,962,582 தொகை என காட்டப்பட்டிருந்தமையால் அந்த மீதிகளிடையே ரூபா 89,612 இற்கான வித்தியாசம் ஒன்று அவதானிக்கப்பட்டது.	சரியான புத்தக மீதியொன்று பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என.	நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள கிரயம் மற்றும் சேர்வுப் பதிவேட்டின் படி கிரயத்தின் வித்தியாசத்தை இனங்கண்டு 2025 ஆண்டின் கணக்குகளில் சரி செய்யப்பட வேண்டும்.
(இ)	மீளாய்வாண்டின் முத்திரைக் கட்டணம் மற்றும் நீதிமன்றத் தண்டப் பண வருமானம் முறையே ரூபா 341,125 தொகை மற்றும் ரூபா 79,633 தொகை குறைவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.	நடைமுறை ஆண்டிற்காக கிடைத்திருந்த அட்டவணையின் படி வருமானம் இனங்காணப்பட்டது என.	குறைவாக காணப்பட்டிருந்த நீதிமன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டண வருமானம் 2025 ஆண்டின் போது சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும்.

(ஈ)	பலவின செலவுகள் மற்றும் கணக்காய்வுக் கட்டணத்திற்காக முறையே ரூபா 26,962 தொகை மற்றும் ரூபா 120,000 தொகை கடன் கொடுத்தோர் ஏற்பாடு செய்திருக்கவில்லை.	எதிர் காலத்தில் கணக்குகள் தயாரிக்கும் போது சரியாக கடன் கொடுத்தோர் ஏற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என.	கடன்கொடுத்தோர் ஏற்பாடுகள் செய்திருக்காத செலவுகளுக்காக சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும்.
(உ)	முன்னைய ஆண்டுகளுக்காக செலுத்தப்பட்டிருந்த ரூபா 475,935 இற்கான நிலுவைச் சம்பளம் ஆண்டிற்கான செலவுகள் என கணக்கீடு செய்யப்பட்டிருநதது.	எதிர் காலத்தில் கணக்குப் பதிவு செய்யும் போது சரியாக ஆண்டிற்கான செலவுகளை கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என.	முன்னைய ஆண்டுகளுக்கான செலவுகளை இனங்கண்டு கணக்கீடு செய்ய வேண்டும்.

1.6.3 இணக்கஞ செய்யப்படாத கணக்கு மீதிகள்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள 07 கணக்கு விடயங்கள் தொடர்பான பெறுமதி மற்றும் நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பித்திருந்த அட்டவணையின் படி பெறுமதிகளிடையே ரூபா 8.88 மில்லியனிற்கான வித்தியாசமொன்று அவதானிக்கப்பட்டது.	அட்டவணைகள் நாளதுவரை ஆக்கப்படவில்லை எனவும், வித்தியாசத்தை எதிர் காலத்தில் சரி செய்யப்படும் எனவும்.	அட்டவணைகள் நாளதுவரையாக்கி கணக்கு மீதிகளில் வித்தியாசங்களை இணக்கம் செய்து சரி செய்ய வேண்டும்.

1.6.4 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
கூட்டுப்பெறுமதி ரூபா 563,494 தொகைக்கான 03 கணக்கு விடயங்கள் தொடர்பாக விரிவான அட்டவணைகள் மற்றும் காலப்பகுப்பாய்வு மீதியை உறுதிப்படுத்தல்கள் சமர்ப்பிக்கப்படாத காரணத்தினால் திருப்திகரமான பரிசோதனைகள் மேற்கொள்ள முடியவில்லை.	பல வருட காலமாக காணப்படுகின்ற மீதிகளாக காணப்படுவதுடன், உறுதிப்படுத்துவதற்காக எதுவித அட்டவணைகளும் காணப்படவில்லை எனவும், வைப்புப் பதிவேட்டில் இந்தப் பெறுமதிகள் மீதியாக காட்டப்படாமையால் 2025 ஆண்டில் சரி செய்தல் மேற்கொள்ளப்படும் என.	நிதிக்கூற்றுக்களில் காணப்பட்டுள்ள கணக்கு மீதிகளை உறுதிப்படுத்தக்கூடிய விரிவான அட்டவணைகள், காலப்பகுப்பாய்வு மீதிகளை உறுதிப்படுத்தும் கடிதங்கள் ஆகிய சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

1.7 இணங்காமை

1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

	சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு	இணங்காமைகள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் பிரிவு 134(1)	2013 ஆண்டின் போது முன்னேற்றப்பட்ட பிரதேசங்கள் என வெளியிடப்பட்டிருந்த 04 பிரிவுகளில் வீதவரி அறவீடு செய்வதற்கு சபையினால் இதுவரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	2025 ஆண்டின் மூன்றாவது காலாண்டு முதல் வீதவரி அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என.	முன்னேற்றப்பட்ட பிரதேசங்கள் என வெளியிடப்பட்டிருந்த 04 பிரிவுகளிலிருந்து வீதவரி அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஆ)	2022 ஜனவரி 27 திகதிய 2264/18 இலக்கம் கொண்ட அதிவிஷேட வர்த்தமானியின் மூலம் 1980 இன் 47 ஆம் திருத்தப்பட்ட இலக்க தேசிய சுற்றாடல் சட்டத்திற்கு மேற்கொள்ளப்பட்ட திருத்தங்கள்	சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ள வேண்டிய 12 வியாபார அலகுகள் அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ளாமையால் மீளாய்வாண்டின் போது சபை நிதியத்திற்கு சேகரிக்கக்கூடியதான இருந்த ரூபா 54,000 இற்கான வருமானம் ஒன்றை இழந்திருந்தது.	அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என.	சுற்றாடல் சட்டத்தின் ஏற்பாடுகளின் படி சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ள வேண்டிய 12 வியாபார நிலையங்களுக்காக அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

சபையின் சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் படி மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 9.69 மில்லியன் தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 1.21 மில்லியன் தொகையாக இருந்தது.

2.2 வருமான நிருவாகம்

2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

செயலாளரினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் படி மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

	2024				2023			
வருமான மூலம்	மதிப்பீட்டு வருமானம்	சிட்டையிடப்பட்ட வருமானம்	சேகரிக்கப்பட்ட வருமானம்	திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை	மதிப்பீட்டு வருமானம்	சிட்டையிடப்பட்ட வருமானம்	சேகரிக்கப்பட்ட வருமானம்	திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை
	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா
வீதவரி மற்றும் வரி	1,455,760	1,712,135	1,726,095	(7,200)	852,000	1,366,805	1,391,075	6,760
வாடகை	17,605,900	15,104,270	15,040,095 *	360,197	20,846,320	13,104,557	13,039,449	296,022
அனுமதிப் பத்திரக் கட்டணம்	3,279,520	3,561,639	3,587,639	1,000	3,258,020	3,605,561	3,705,442	26,000
ஏனைய வருமானங்கள்	4,688,300	6,680,146	6,751,976	-	23,503,170	4,564,766	8,610,376	71,830
மொத்தம்	27,029,480	27,058,190	27,105,805	353,997	48,459,510	22,641,689	26,746,342	400,612

* வாடகை ரூபா 26,222 தொகை ஆளுனரின் அங்கீகாரத்துடன், பதிவழித்தல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

2.2.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றல்

	கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	பிரதேச சபைக்குச் சொந்தமான மீன் சந்தையை வாடகைக்கு கொடுக்கும் டென்டர் மீதான ஆதனங்களின் நிலுவை குத்தகை ரூபா 197,198 தொகை பிரதேச சபைச் சட்டத்தின் பிரிவு 159(1) இன் பிரகாரம் அறவீடு செய்திருக்கவில்லை.	வழக்குத் தாக்கல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என.	சட்டத்தின் பிரிவு 159(1) இன் படி நிலுவை வருமானம் விரைவாக அறவீடு செய்யப்பட வேண்டும்.
(ஆ)	மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 78 அறிவித்தல் பலகைகளுக்காக பெற வேண்டிய கட்டணம் ரூபா 336,570 தொகை அறவீடு செய்திருக்கவில்லை.	2025 ஆண்டின் கட்டணத்துடன், நிலுவைத் தொகையையும் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	நிலுவை வருமானம் விரைவாக அறவீடு செய்யப்பட வேண்டும்.
(இ)	மாகாண சபை பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் பெற வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம் முறையே ரூபா 4.12 மில்லியன் தொகை மற்றும் ரூபா 7.42 மில்லியன்	2025 பெப்ரவரி மாதம் அளவில் ரூபா 2.68 மில்லியனிற்காக நீதிமன்றத் தண்டப்பணமும், ரூபா 4.47 மில்லியன் முத்திரைக் கட்டணமும்	பிரதான செயலாளர், ஆளுனர் மற்றும் காணிப் பதிவாளர் அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு இது தொடர்பான முறையான

தொகையாகக் காணப்பட்டது.	அறவிடப்பட்டுள்ளது எனவும், மீதி நிலுவையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும்.	வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டியதுடன் இசைவுச் சான்றிதழ் பெற்றுக் கொள்ளாத நிர்மாண வேலைகள் தொடர்பாக சட்டநடவடிக்கை எடுக்க வேண்டும்.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 இனங்காணப்பட்ட நட்டங்கள்

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியச் சபைக்கு பங்களிப்புத் தொகை செலுத்துதல் உரிய முறையில மேற்கொள்ளப்படாமையால் மீளாய்வாண்டின் போது ரூபா 12,691 இற்கான தொகையொன்று மிகை விதிப்பாக செலுத்த நேரிட்டிருந்தது.	எதிர் காலத்தில் எதுவித தாமதமும் இன்றி அரச நிறுவனங்களுக்கு செலுத்த வேண்டிய கட்டணங்கள் விதிக்கப்பட்ட திகதியில் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என.	சபை நிதியத்திற்கு ஏற்பட்டுள்ள நட்டம் ரூபா 12,691 தொகை பொறுப்பான தரப்பினர்களிடம் அறவீடு செய்யப்பட வேண்டும்.

3.2 முகாமைத்துவத் திறமையின்மை

	கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	சபையினால் அங்கீகரிக்கப்பட்டிருந்த 04 கட்டிட வரைபுகளுக்குரிய அணவல் அங்கீகாரம் வழங்கும் கட்டணம், ஒழுங்குபடுத்தல் கட்டணம், இசைவுச் சான்றிதழ் கட்டணம் என கூட்டுத்தொகை ரூபா 1.36 மில்லியன் தொகையினை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. அதேபோல் மூன்று கட்டிடங்களுக்கான இசைவுச் சான்றிதழ் பெறறக்கொள்ளாமல் நிர்மாண வேலை அலுவல்களை பூர்த்தி செய்து வியாபார நடவடிக்கைகள் நடாத்திச் சென்ற போதிலும், சபையினால் அது தொடர்பாக சட்டநடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	கட்டணங்களில் ரூபா 5,000 தொகையொன்று அறவீடு செய்யப்பட்டுள்ளதுடன், உரிய கட்டணங்கள் செலுத்துமறு கடிதங்கள் அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என.	அறவிடப்பட வேண்டிய ரூபா 1.36 மில்லியனிற்கான கட்டணத்தை உரிய முறையில் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன், இசைவுச் சான்றிதழ் பெற்றிருக்காத நிர்மாண வேலை தொடர்பாக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

(ஆ)	31 ஏக்கர் 03 ரூட் இற்கான சபைக்கு சொந்தமான 04 காணிகள் வேறு நபர்களினால்/ வியாபாரிகளினால் அங்கீகாரம் இன்றி பயன்படுத்திய போதிலும், அது தொடர்பாக சபையினால் தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	இந்த நிர்மாண வேலைகள் தற்காலிகமானவை எனவும், எதிர் காலத்தில் அந்த நிர்மாண வேலைகள் மற்றும் தற்காலிக பயிர்ச் செய்கைகளை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என.	சபைக்குச் சொந்தமான 04 காணிகளில் அங்கீகாரம் இன்றி பயன்படுத்தும் நபர்களை அகற்றி சபையின் ஆதனங்களை பாதுகாத்துக்கொள்ள வேண்டியதுடன், ஆக்கபூர்வமான கருமங்களுக்கு ஈடுபடுத்த வேண்டும்.

3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	பிரதேச சபையினால் அனுபவிக்கப்படுகின்ற 136 ஏக்கர் 01 ரூட் 16 பர்சஸிற்கான 111 காணிகளின் சட்டரீதியான உரிமையை உரித்தாக்கியிருக்கவில்லை.	காணிகளை உரித்தாக்குவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என.	சபையினால் அனுபவிக்கப்படுகின்ற 111 காணிகளின் உரிமையை உரித்தாக்குவதற்கு விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஆ)	சபைக்குக் கிடைத்திருந்த திகதி அறுதியாக குறிப்பிடப்பட்டிருக்காத 02 வாகனங்கள் மற்றும் 02 பவுசர்கள் ஓட்ட நிலையிலிருந்து அகற்றப்பட்ட போதிலும், அவற்றை திருத்த வேலை மேற்கொண்டு பயன்படுத்துவதற்கு அல்லது அப்புறப்படுத்துவதற்கு அல்லது உரிமையை உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	உரித்தாக்காத வாகனங்களை உரித்தாக்குவதற்கான கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளது என.	02 டிரக்டர் வண்டிகள் மற்றும் இரண்டு பவுசர் வண்டிகளின் சட்டரீதியான உரிமையை உறுதிப்படுத்தி திருத்த வேலை மேற்கொண்டு பயன்படுத்துவதற்கு அல்லது அப்புறப்படுத்துதவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

3.4 செயற்திட்டங்கள், செய்பணிகள் அல்லது மூலதன வேலைகளின் தாமதங்ள்

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
சபையினால் தயாரிக்கப்பட்டிருந்த 2024 ஆண்டின் வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தின் படி மதிப்பீட்டுத் தொகை ரூபா 69.94 இற்கான 49 அபிவிருத்தித் திட்டங்களில் ரூபா 63.42 மில்லியனிற்கான 40 அபிவிருத்தித் திட்டங்கள் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.	தேவையான ஏற்பாடுகள் கிடைக்கப் பெறாமையால் மற்றும் வருமான மட்டங்கள் குறைவடைந்ததால் திட்டங்களை செயற்படுத்த முடியவில்லை.	பாதீட்டின் மூலம் ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருந்த அபிவிருத்தித் திட்டங்களை செயற்படுத்த வேண்டும். அவ்வாறின்றேல் திட்டங்களை பொருத்தமான விதத்தில் திருத்தம் மேற்கொள்ள வேண்டும்.

3.5 ஒப்பந்த நிருவாகத்தில் பலவீனங்கள்

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
2024 ஆண்டின் தென் மாகாண அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் சபையினால் அங்குனுகொல பெலஸ்ஸ நகரத்தில் மீன் சந்தைக்கு அண்மையில் பாதையை புனர்நிர்மாணம் செய்வதற்காக வேலை விடய இலக்கம் 01 இன் கீழ் ABC வழக்கப்பட்டு பரப்புவதற்காக போக்குவரத்துக் கிரயம் ரூபா 83,816 தொகை மிகையாக செலுத்தப்பட்டிருந்தது.	மிகையாக செலுத்தப்பட்டிருந்த தொகை குறிப்பிட்ட ஒப்பந்தக்காரரின் தடுத்து வைத்தல் பணத்திலிருந்து கழிக்கப்படும் எனவும், ஏற்பாடுகள் ஒதுக்கிய நிறுவனமான உள்ளூராட்சி திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்டது என.	சரியான ரேட் இல் மதிப்பீடுகளுக்கு உட்படுத்தி அந்த ரேட் இன் படி கொடுப்பனவு செய்யப்பட வேண்டியதுடன், மிகையாக செலத்தும் தொகையை குறிப்பிட்ட தரப்பினரிடம் அறவீடு செய்யப்பட வேண்டும்.

3.6 மனித வள முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	சபையில் 13 மிகைப் பதவியணியினரை முறைப்படுத்துவதற்கு மீளாய்வாண்டு இறுதி வரையும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	மிகை உத்தியோத்தர்களை ஆக்கபூர்வமாக சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதுடன், முறைப்படுத்துவதற்கு அலுவல்கள் மேற்கொள்ளப்படுகின்றது என.	சபையின் பதவி தேவைப்பாடு தொடர்பாக முறையான மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட வேண்டும்.
(ஆ)	2023 ஜூலை மாதத்தில் இறந்த தொழிலாளர் ஒருவரிடம் அறவிடப்பட வேண்டிய ரூபா 252,083 தொகைக்கான கடன் மீதியை அறவீடு செய்திருக்கவில்லை.	மரணப் பணிக்கொடை கிடைத்தவுடன், கடன்தொகையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என.	கடன்மீதிகளை விரைவாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

4 கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

4.1 வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம்

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
தொழில்துறை, புத்தாக்க மற்றும் உட்கட்டமைப்பு அபிவிருத்தியின் கீழ் மீளாய்வாணடின் போது 20 பாதைகள் தீர்மானித்தல் மற்றும் 05 பாலங்கள் மற்றும் மதகுகள் புனர்நிர்மாணம் செய்வதற்காக திட்டமிடப்பட்ட போதிலும், ஆண்டின் போது 19 பாதைகள் மற்றும் ஒரு மதகு நிர்மணிக்கப்பட்டிருந்தது.	நிர்மாண வேலைக்காக ஏற்பாடுகள் விண்ணப்பித்த போதிலும், ஏற்பாடுகள் கிடைக்கப் பெறாமையால் அந்த நிர்மாண வேலைகள் செயற்படுத்த முடியவில்லை.	இலக்காகிய அபிவிருத்தித் திட்டங்களை திட்டமிடுவதற்கும் அவற்றை செயற்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

4.2 சுற்றாடச் சிக்கல்கள்

	கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	வருடாந்த திண்மக் கழிவுப் பொருள் திட்டத்தின் படி 2024 பெப்ரவரி மாதம் முதல் சேதனப் பசளை பயன்படுத்தி மாதிரி பண்ணையொன்று ஆரம்பிக்கப்பட்டு நடாத்திச் செல்வதற்காக திட்டமிடப்பட்டிருந்த போதிலும், கணக்காய்வுத் திகதி வரை செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.	நிதியம் போதியளவு காணப்படாமை, ஊழியர் தட்டுப்பாடு ஆகிய காரணங்களினால் பண்ணையொன்று ஆரம்பிப்பதற்கு முடியாமல் போனதுடன், அதற்குப் பதிலாக குறைந்த செலவில் கோழிப் பண்ணையொன்று ஆரம்பிப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என	கருமங்களுக்காக திட்டம் தயாரிக்கும் போது நிலவுகின்ற வளங்கள், நிதியம் மற்றும் பதவியணியினர் தொடர்பாக கவனம் செலுத்தி திட்டமிடல் மேற்கொள்ளப்படல் வேண்டும்.
(ஆ)	திண்மக் கழிவுப் பொருள் நிலையத்தின் பல்வேறு இடங்களில் குவிக்கப்பட்டிருந்த இலத்திரனியல் கழிவுப் பொருட்களை உரிய முறையில் அகற்றுவதற்கான முறையான வேலைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.	இலத்திரனியல் கழிவுப் பொருட்களை மீள்சுழற்சி செய்வதற்காக மத்திய சுற்றாடல் அதிகாரசபைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என.	திண்மக் கழிவுப் பொருளை அப்புறப்படுத்துவதற்காக முறையான வேலைத் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும்.